சென்னை முதன்மைக் கல்வி அலவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந.க.எண்.2625 /ஈ3/2022-3 நாள்.07 .04.2022

-----

பொருள்: குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் - 2022-2023 ஆம் கல்வியாண்டில் அனைத்துச் சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு நுழைவுநிலை வகுப்பில் (LKG/I Std) குறைந்தபட்சம் 25% ,இட ஒதுக்கீடு வழங்குதல் - சேர்க்கை நடைமுறைகள் பள்ளிகளுக்கு அறிவுரை வழங்கியது - தொடர்பாக

பார்வை: சென்னை-06, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட மாநில முதன்மைத் தொடர்பு அலுவலர் மற்றும் தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.1476/இ1/2022 நாள்.06.04.2022.

---------

பார்வையில் காணும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் செயல்முறையினில் தெரிவித்துள்ளவாறு நுழைவு நிலை வகுப்பிலுள்ள மொத்த இடங்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட 25% இடங்கள் சார்ந்த விவரங்களை பள்ளிகளிலிருந்து பெற்று பின்வரும் படிவங்களில் பூர்த்தி செய்து 11.04.2022 மாலை 5.00 மணிக்குள் சென்னை முதன்மைக்கல்வி அலுவலகத்தில் நேரில் சமர்ப்பித்திட ஆய்வு அலுவலர்களான அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மழலையர் மற்றும் துவக்கப் பள்ளிகள் சார்பான விவரங்களை சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர்களின் மேலொப்பம் பெற்று சமர்பித்திட வட்டாரக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்விவரங்கள் 13.04.2022 க்குள் EMIS Portal இல் CEO Login இல் பதிவேற்றம் செய்திட வேண்டும். மேலும் 13.04.20222 க்குப் பின்பு இந்த Option Lock செய்யப்பட்டு நடைமுறையிலிருந்து விலக்கிக் கொள்ளப்படும் என்ற நிலையில் 11.04.2022 க்குள் தவறாது சமர்ப்பித்திட

கேட்டுக்கொள்ளப்படுகிறது. தவறும் பட்சத்தில் இதனால் ஏற்படும் பின் விளைவுகள் முழுமைக்கும் சார்ந்த ஆய்வு அலுவலர்களான மாவட்டக்கல்வி அலுவலர்கள் மற்றும் வட்டாரக்கல்வி அலுவலர்களே முழுப்பொறுப்பேற்க நேரிடும் எனத் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு : படிவம் 1, 2, 3 மற்றும் 4.

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை.

பெறுநர்

1. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.
2. உதவித்திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, எழும்பூர், சென்னை-08.
3. அனைத்து வட்டாரக்கல்வி அலுவலர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்ககம், சென்னை -06 தக்க தொடர் நடவடிக்கைக்காக பணிந்து அனுப்பலாகிறது.
2. இயக்குநர், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககம், சென்னை -06 தகவலுக்காகப் பணிந்து அனுப்பப்படுகிறது.